## தமிழகத்தில் 'நடப்போம் நலம் பெறுவோம்' திட்டம் இன்று தொடக்கம்: முதல்வர் தொடங்கி வைக்கிறார்



கோப்புப் படம்

**சென்னை:** நடைபயிற்சி செய்யும் பழக்கத்தை பொதுமக்களிடம் ஊக்குவிக்கும் வகையில் 'நடப்போம் நலம் பெறுவோம்' (Health Walk) என்ற சிறப்பு திட்டத்தை தமிழக சுகாதாரத் துறை செயல்படுத்துகிறது. இன்று காலை 8 மணிக்கு சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் இத்திட்டத்தை தொடங்கி வைக்கும் முதல்வர்ஸ்டாலின், மற்ற மாவட்டங் களில் காணொலி மூலமாக தொடங்கி வைக்கிறார்.

இதையொட்டி, அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் 8 கி.மீ. நீளத்துக்கு பிரத்யேகநடைபாதை அமைக்கப்பட்டுள் ளது. சென்னை பெசன்ட் நகரில்டாக்டர் முத்துலட்சுமி பூங்காவில் தொடங்கி, பெசன்ட் நகர் அவென்யூ சாலை, எலியட்ஸ் கடற்கரை வரை இப்பாதை நீள்கிறது. இங்கு வாகனங்கள் நிறுத்தம், ஓய்வு இருக்கைகள், கழிப்பறை உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. செல்லப்

பிராணிகளுடன் நடைபயிற்சி மேற்கொள்ளவும் வசதிசெய்யப்பட்டுள்ளது. மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை மாநகராட்சியுடன் இணைந்து ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் குறித்த மருத்துவ பரிசோதனை முகாம் இங்கு நடத்தப்பட உள்ளது.

**உயர் ரத்த அழுத்தம் குறையும்:** இதுகுறித்து பொது சுகாதாரத் துறை இயக்குநர் செல்வ விநாயகம் கூறும்போது, ‘‘உலக சுகாதார அமைப்பின் பரிந்துரைப்படி, தினமும் 30 நிமிடம் என வாரத்தில் 5 நாட்கள் உடற்பயிற்சி செய்வது உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். குறிப்பாக, தினமும் 8 கி.மீ. தூரம், அதாவது 10,000அடிகள் வைத்து வேகமாக நடப்பதால், உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் போன்ற தொற்றா நோய்களை தடுக்கமுடியும். தொடர் நடைபயிற்சியால் மன அழுத்தம் குறைவதுடன், உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய்களால் ஏற்படும் இதர நோய் பாதிப்புகளும் 30 சதவீதம் வரை குறையும்’’ என்றார்.

## இந்திய அரசின் உதவியுடன் இலங்கை தொழிலாளருக்கு 10,000 வீடுகள்: ரணில் விக்ரமசிங்க, நிர்மலா சீதாராமன் அடிக்கல் நாட்டினர்



இலங்கையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் சென்ற மத்திய

## நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுடன், இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்டோர்.

**ராமேசுவரம்:** இலங்கையில் மலையகத் தோட்டத்தமிழர்களுக்கு இந்திய அரசின் சார்பாக கூடுதலாக 10 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இலங்கை உள்நாட்டுப் போரின்போது உள்நாட்டிலேயே புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு இந்தியாவின் நிதியுதவியுடன் 50 ஆயிரம்வீடுகளை கட்டித்தர முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு முன்வந்தது.

இவற்றில், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 46 ஆயிரம் வீடுகள் கட்டி ஒப்படைக்கப்பட்டன. மேலும், தேயிலைத் தோட்டத் தமிழர்கள் வாழும் மலையகப் பகுதிகளில் 3,700 வீடுகள் கட்டித் தரப்பட்டன.

இலங்கையில் 2017-ல் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பிரதமர் மோடி, இந்திய வம்சாவளியினர் அதிகம் வாழும் மலையகப் பகுதிகளுக்கு விஜயம் செய்தார். அப்போது, “மலையக மக்களின் கல்வி,சமூக, பொருளாதார வளர்ச்சிக்காக இலங்கை அரசு முன்னெடுக்கும் திட்டங்களுக்கு, இந்தியா ஒத்துழைப்பு வழங்கும். மலையகத் தமிழர்களுக்காக இந்திய அரசுத் தரப்பில் 4,000 வீடுகள் கட்டும் திட்டத்துடன், கூடுதலாக 10 ஆயிரம் வீடுகள் கட்டித் தரப்படும்” என்று மோடி அறிவித்தார்.

இந்நிலையில், மலையக மக்கள்தமிழகத்திலிருந்து அழைத்து வரப்பட்டு 200 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ‘நாம் 200' என்ற தலைப்பிலான மாநாடு கொழும்புவில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இதில், கொட்டக்கலை பகுதியில் அமைந்துள்ள மவுன்ட் வெர்மன் தேயிலைத் தோட்டத்தில் இந்தியாவின் நிதியுதவியுடன் 10,000 வீடுகள் கட்டும் திட்டத்துக்கு

இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்கவும், மத்திய நிதிஅமைச்சர் நிர்மலா சீதாராமனும் இணைந்து காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினர். இலங்கை பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ச, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டைமான், இலங்கைக்கான இந்திய தூதர் கோபால் பாக்லே, தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை முன்னிலை வகித்தனர்.

**15 மில்லியன் டாலர்...:** இதில், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசும்போது, “இந்த அடிக்கல் நாட்டுவிழா, இரு நாட்டு உறவில் சிறப்பானதருணம். இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்தபோது இந்தியா ரூ.33,000 கோடிவழங்கியது” என்றார்.

முன்னதாக, கொழும்புவில் உள்ள அதிபர் மாளிகையில், அதிபர்ரணில் விக்ரமசிங்க மற்றும் நிதிஅமைச்சர் நிர்மலா சீதாராமன்சந்திப்பு நடந்தது. இதில், இந்தியா–இலங்கை இடையிலான வரலாற்றுமற்றும் கலாச்சார ரீதியிலான பவுத்ததொடர்புகளை பலப்படுத்துவதற்காக 15 மில்லியன் அமெரிக்க டாலர் நிதி இந்தியா சார்பாக வழங்கப்பட்டது.

மேலும், திரிகோணமலையில் பாரத ஸ்டேட் வங்கியின் கிளையை தொடங்கிவைத்த நிர்மலா சீதாராமன், திருக்கோணஸ்வரம் சிவன்கோயில், யாழ்ப்பாணம் நல்லூர் முருகன் கோயில்களில் சுவாமி தரிசனம் செய்தார்

## நேபாள நிலநடுக்க பலி 128 ஆக அதிகரிப்பு: மீட்பு, நிவாரணப் பணிகள் தீவிரம்



ஜாஜர்கோட்டில் நிவாரண முகாமில் தஞ்சமடைந்துள்ள மக்கள்

**காத்மாண்டு:** நேபாள நாட்டில் நேற்று (வெள்ளிக்கிழமை) நள்ளிரவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் கட்டிட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 128 ஆக அதிகரித்துள்ளது. பலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இடிபாடுகளில் இன்னும் பலர் சிக்கியிருக்கலாம் என அஞ்சுவதாகவும் பலி எண்ணிகை அதிகரிக்கலாம் எனவும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள மீட்புக் குழுவினர் தெரிவிக்கின்றனர். வீடுகளை இழந்தோர் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**6.4 ரிக்டர்:** நேபாளத்தின் மேற்குப் பகுதியில் நேற்று நள்ளிரவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. சுமார் 1 நிமிடத்துக்கு மேல் நிலநடுக்கம் உணரப்பட்டதாக தெரிகிறது. இது ரிக்டர் அளவுகோலில் 6.4 ஆக பதிவானது. நிலநடுக்கம் ஜாஜர்கோட் பகுதியில் லாமிடண்டா எனுமிடத்தில் மையம் கொண்டிருந்ததாக தேசிய நிலநடுக்க அளவீடு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் நேபாள நாட்டின் பிரதமர் புஷ்ப கமல் தாஹல், நாட்டின் முப்படைகளும் மீட்பு, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுத்தப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார். ஜாஜர்கோட்டுடன் தைலேக், சல்யான் மற்றும் ரோல்பா மாவட்டங்களிலும் பாதிப்பு அதிகமாக இருப்பதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த 30 நாட்களில் மூன்றாவது முறையாக நேபாளத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தின் தாக்கம் இந்தியத் தலைநகர் டெல்லி உள்பட நொய்டா, பாட்னா ஆகிய நகரங்களிலும் உணரப்பட்டது.

இமாலய மலையில் அமைந்துள்ள பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்படுவது வழக்கமானதாகவே இருக்கின்றது. அந்த வகையில் நேபாளத்திலும் அவ்வப்போது நிலநடுக்கங்கள் ஏற்படுவதுண்டு. கடைசியாக கடந்த 2015 ஆம் ஆண்டு 7.8 ரிக்டர் அளவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி 12 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். 10 லட்சம் கட்டிடங்கள் தரைமட்டமாகின என்பது நினைவுகூரத்தக்கது.

## ”பயங்கரவாதத்தை தாண்டி பாலஸ்தீன பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்” - மத்திய அமைச்சர் ஜெய்சங்கர்


ஜெய்சங்கர்

**ரோம்:** பயங்கரவாதத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதது, அதே நேரத்தில் பாலஸ்தீனர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதும் முக்கியம் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

கடந்த மாதம் 7-ம் தேதி அன்று இஸ்ரேலின் தெற்கு பகுதியை குறிவைத்து ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தினர். தொடர்ந்து இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்துக்கு இடையிலான எல்லை ஓரத்தில் அமைந்துள்ள இஸ்ரேல் நாட்டின் பகுதியில் இருந்து பலரை பிணைக் கைதிகளாக ஹமாஸ் அமைப்பினர் சிறை பிடித்து சென்றனர். அதையடுத்து காசா மீது தாக்குதலை தொடுத்தது இஸ்ரேல்.

இதில் 1,400-க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். 5,000-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இதற்கு பதிலடியாக ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக இஸ்ரேல் ராணுவம் போர் தொடுத்து வருகிறது. இதையடுத்து, இஸ்ரேல் ராணுவ தாக்குதல்களில் இதுவரை 9,061 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 3,760 பேர் குழந்தைகள், 2,326 பேர் பெண்கள். இதுவரை சுமார் 22,000-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக' பாலஸ்தீன சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.அதோடு, இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், கடினமான இந்த நேரத்தில் இந்தியா இஸ்ரேலுக்கு ஆதரவாக உள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், இத்தாலியில் வெளியுறவுத் துறைக்கான செனட் உறுப்பினர்களிடையே பேசிய வெளியுறவுதுறை அமைச்சர் ஜெய்சங்கர், "அக்டோபர் 7 ஆம் தேதி இஸ்ரேலில் நடந்தது கொடூரமான பயங்கரவாத தாக்குதல். அதற்குப் பிறகு நடந்த செயல்கள் அனைத்தும் அந்தப் பகுதியையே வேறு திசைக்குக் கொண்டு சென்றுள்ளது. பயங்கரவாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாதது, அதே நேரத்தில் பாலஸ்தீனர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதும் முக்கியம்.

தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண பேச்சுவார்த்தை முக்கியமானதாகும். ஒருபோதும் மோதல் மற்றும் பயங்கரவாதத்தின் மூலம் தீர்வு காண முடியாது. தற்போதைய சூழ்நிலையில் மனிதாபிமான சட்டம் மதிக்கப்பட வேண்டும். ஹமாஸின் பயங்கரவாத தாக்குதலை கண்டித்து, இஸ்ரேலுக்கு முழு ஆதரவை தெரிவித்த முதல் உலக தலைவர்களில் பிரதமர் நரேந்திர மோடியும் ஒருவர். அங்கு மீண்டும் ஸ்திரத்தன்மை ஏற்படவேண்டும். அப்பகுதியில் தொடர்ந்து மோதல் நீடிக்கக் கூடாது" என்றார்.

## கடந்த 9 ஆண்டுகளில் உணவு பதப்படுத்தும் துறையில் ரூ.50,000 கோடி அந்நிய முதலீடு: பிரதமர் மோடி



டெல்லி பிரகதி மைதானத்தில் உள்ள பாரத் மண்டபத்தில் 'வோர்ல்ட் ஃபுட் இந்தியா 2023' நிகழ்ச்சியை நேற்று தொடங்கி வைத்து பேசிய பிரதமர் மோடி.

**புதுடெல்லி:** உலகின் உணவு கூடமாக இந்தியாவை வெளிப்படுத்த 'வோர்ல்ட் ஃபுட் இந்தியா' என்ற பெயரில் முதல் நிகழ்ச்சி கடந்த 2017-ம் ஆண்டு நடத்தப்பட்டது. கரோனா பெருந்தொற்று காரணமாக அடுத்தடுத்த ஆண்டுகளில் இந்நிகழ்ச்சியை நடத்த முடியவில்லை.

இந்நிலையில் இந்தாண்டு சிறுதானியங்களின் ஆண்டாக கொண்டாடப்படுவதை முன்னிட்டு 2-வது 'வோர்ல்ட் ஃபுட் இந்தியா' நிகழ்ச்சி டெல்லி பிரகதி மைதானத்தில் உள்ள பாரத் மண்டபத்தில் நேற்று முதல் 5-ம் தேதி வரைநடத்தப்படுகிறது. இதில் 80 நாடுகளைச் சேர்ந்த உணவு பதப்படுத்துதல் நிறுவனங்களின் சிஇஓ.க்கள் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்து கொண்டு 'ஃபுட் ஸ்ட்ரீட்' உணவு கண்காட்சியை தொடங்கி வைத்தார். இதில் இந்திய சமையல் கலைஞர்கள் 200-

க்கும் மேற்பட்டோர் பங்கேற்று இந்திய பாரம்பரிய சமையல் வகைகளை செய்து காட்டுகின்றனர்.

அரசு அமைப்புகள், தொழில் துறையினர், விவசாயிகள், தொழில்முனைவோர் மற்றும் இதரபிரிவினர், வேளாண் உணவு துறையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசிக்க இந்நிகழ்ச்சி சிறந்த தளமாகஅமைந்துள்ளது. பல நிறுவனங்களின் சிஇஓ.க்கள் முதலீடு குறித்து ஆலோசிப்பதற்கான வட்ட மேஜை கூட்டமும் இந்நிகழ்ச்சியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த 3 நாள் நிகழ்ச்சியில் உணவு பதப்படுத்துதல் துறை தொடர்பான 48 நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. உணவு பதப்படுத்துதல் துறையில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்கள் ஆகியவை பற்றியும் இங்கு விளக்கம் அளிக்கப் படுகின்றன.

இந்நிகழ்ச்சி மூலம் உணவு பதப்படுத்துதல் துறையில் அந்நியநேரடி முதலீடு ரூ.75,000 கோடிக்கும் மேல் கிடைக்கும் வாய்ப்புள்ளது. இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி கூறியதாவது:

உணவு பதப்படுத்துதல் துறை வளர்ந்து வரும் துறையாக அங்கீகரிக்கப்படுவதற்கு 'வோர்ல்ட் ஃபுட் இந்தியா' நிகழ்ச்சியே சிறந்த உதாரணம். உணவு பதப்படுத்தும் துறையில், கடந்த 9 ஆண்டுகளில் ரூ.50,000 கோடி அந்நிய நேரடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. உணவு பதப்படுத்துதல் துறைக்கும், விவசாய கொள்கைகளுக்கும் ஆதரவான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வதால் அந்நிய நேரடி முதலீடு அதிகரித்துள்ளது.

முதலீட்டாளர்களுக்கு சாதகமான கொள்கைகளை மத்திய அரசு எடுத்து வருவதால், உணவுத்துறை புதிய உச்சத்துக்கு சென்றுள்ளது. இந்திய வேளாண் ஏற்றுமதியில் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் பங்கு 13

சதவீதத்திலிருந்து 23 சதவீதமாக அதிகரித்துள்ளது. பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் மொத்த ஏற்றுமதி 150 சதவீதம் அதிகரித்துள்ளது. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

EVA STALIN IAS ACADEMY